<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>MCOP.No.88/2024</u>

PW : 1

2026 ஆம் ஆண்டு மே மாதம் 04 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4 ன் படி திருமதி. Dr. R. லதா, M.A., M.L., Ph.D., தலைமை நீதித்துறை நடுவர், திருவாரூர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. இராஜேந்திரன் | த / பெ. | : | திரு. ராமையன் |
| கிராமம் | : | புதூர் | தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | கொத்தனார் | வயது | : | 62 |

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த மனுவில் 1ம் மனுதாரர் ஆவேன். நான் மனுதாரர் தரப்பில் சாட்சி 1 ஆக சாட்சியமளிக்கிறேன். எனது தரப்பில் எழுத்துமூல நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது. அதில் சொல்லப்பட்ட சங்கதிகள் உண்மையானவை. அவை என்னால் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டது. அவை உண்மையானவை. எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1) 17.10.2023 ஆம் தேதிய **முதல் தகவல் அறிக்கை நகல் ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2)16.10.2023 ஆம் தேதிய **விபத்து பதிவேடு நகல் ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) **திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கொடுத்த Medico Legal Opinion நகல் ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) 02.11.2023 ஆம் தேதியில் **திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் விடுவித்த போது கொடுத்த டிஸ்சார்ஜ் சம்மரி நோட்டு அசல் ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) 25.10.2023 ஆம் தேதியிட்ட **1 ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் ம.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) 24.02.2023 ஆம் தேதியிட்ட **1 ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீட்டு பாலிசி நகல் ம.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7) 30.09.2018 ஆம் தேதியிட்ட **1 ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் நகல் ம.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8) 16.11.2023 ஆம் தேதியிட்ட **குற்ற எண். 618/2023 இறுதி அறிக்கை நகல் ம.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9) **என்னுடைய ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் ம.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10)**என்னுடைய வங்கி பாஸ்புத்தகம் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் ம.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11) **பல்வேறு தேதிகளில் எனக்கு எடுக்கப்பட்ட Scan எண்ணிக்கை - 4 அசல் ம.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

12) **பல்வேறு தேதிகளில் எனக்கு டாக்டர் அன்சாரி கொடுத்த மருத்துவக்குறிப்பு சீட்டு எண்ணிக்கை - 31 மற்றும் மருந்து மாத்திரை வாங்கியதற்கான இரசீதுகள் - 41 தொகை ரூ.41,753/- அசல் எதிர்மனுதாரர் ஆட்சேபனையுடன் ம.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

13) 01.06.2024 ஆம் தேதியிட்ட **டாக்டர் அன்சாரிக்கு பணம் செலுத்தியதற்கான இரசீது தொகை ரூ.6,960/- அசல் எதிர்மனுதாரர் ஆட்சேபனையுடன் ம.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

14) பல்வேறு தேதிகளில் நான் **டாக்டர் அன்சாரி மருத்துவமனைக்கு வாடகை காரில் வந்ததற்கான டிரிப் சீட் எண்ணிக்கை - 28 தொகை ரூ.40,500/- அசல் எதிர்மனுதாரர் ஆட்சேபனையுடன் ம.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

15) 02.08.2013 ஆம் தேதியில் **வழங்கிய என்னுடைய ஓட்டுநர் உரிமம் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் ம.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

16) என்னுடைய **வாகனத்தின் RC BOOK அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் ம.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

இருதரப்பு கேட்டுக்கொண்டதற்கு இணங்க **திருவாரூர் மருத்துவக்கல்லூரி குழுமத்தால் வழங்கப்பட்ட ஊன தகுதிச்சான்று நீ.ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**என் சாட்சியத்தை ஏற்று இம்மனு தீர்ப்பாக கேட்டுக்கொள்கிறேன்.**

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

என்னுடைய வருமானத்தைக் காட்டக்கூடிய ஆவணம் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடம் நேரான இடம் தான். வாகனம் வருவது நன்றாக தெரியும். நான் ஓட்டிச்சென்ற வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வு செய்தார் அந்த ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் ஓட்டிச்சென்ற வாகனத்திற்கு முறையான காப்பீடு இல்லை என்பதால் மோட்டார் வாகன தணிக்கை செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை சரியாக கவனிக்காமல் நான் தான் விபத்தை ஏற்படுத்தி கொண்டேன் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரிதான். இந்த விபத்திற்கு முழு காரணம் என்னுடைய கவனக்குறைவு தான் காரணம் என்றாலும், 2ம் எதிர்மனுதாரர் எந்த ஒரு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றாலும் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்றால் அது அரசு மருத்துவமனையின் சிகிச்சையிலேயே சரியாகிவிட்டது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.12 ,13 மற்றும் 14 ஆகிய ஆவணங்கள் வழக்கில் இழப்பீடு அதிகம் பெறுவதற்காக என்னால் உற்பத்தி செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு மிக அதிகம் என்றாலும், அதனால் இழப்பீடு எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றாலும் சரியல்ல. விபத்து ஏற்பட்டு 6 மாதம் காலத்திற்கு பிறகு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது போல் இந்த விபத்து ஏற்படவில்லை என்றாலும், 2ம் எதிர்மனுதாரர் பொறுத்து இம்மனு தள்ளுபடிக்குரியது என்றாலும் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.05.04 19:09:30 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்